Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.65/12

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : புகழேந்தி | Father/Husband Name | : கார்மேகம் |
| Age | : | Calling | : |
| Date | : 23.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04 day of 02.2026

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

கடந்த 04.12.2011 ம் தேதி மதுரை மாவட்டம், கீழவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆயவாளராக பணிபுரிந்தபோது என்னுடன் பணிபுரிந்த திரு.ராஜேந்திரன் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் இறந்துவிட்டபடியால் அவர் தயார் செய்த ஆவணங்களை பார்த்து முதற்கட்ட புலன்விசாரணை சம்மந்தமாகவும் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 04.12.2011 ம் தேதி காலை 10.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் கீழவளவு காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது பொன்னபட்டியை சேர்ந்த ஜெயராஜ் என்ற மலர் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துபூர்வமான புகாரினை பெற்று புகாரின் 194/11, இதச பிரிவு 147, 323, 294(b), 109 மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், சிறப்பு சார்பு ஆய்வாளர்

ரஜேந்திரன் அன்றையதினமே 12.00 மணியளவில்  சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நல்லுசாமி  மற்றும பழனிச்சாமி முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 4 மற்றும் அசாஆ 5  ஆக குறியீடு செய்யப்படுகிறது )** சாட்சிகள் நல்லுச்சாமி, பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்,

சாட்சிகள் ராமு, பனையன், ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 24.12.2011ம் தேதி ஜெயராஜ் என்ற மலர், தனசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 26.12.2011ம் தேதி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு என்னிடம் ஒப்படைத்தார்.

நான் இவ்வழக்கை மேற்கட்ட புலன்விசாணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தேன். சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் சாட்சிகள் என்னிடமும் சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட தனபாக்கியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் அனைவரும் முன் ஜாமீன் பெற்றுவிட்டதால் கைது செய்யப்படவில்லை.

இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவர் திருமதி. மங்கையக்கரசி என்பவரை 04.04.2012ம் தேதி விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே இவ்வழக்கினை முதல் விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன்  எனது புலன்விசாரணை முடித்து 04.04.2012ம்

தேதி எதிரி 1 மீது 147, 323, 109 மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4ன்கீழும், 2 மற்றும் 4ம் எதிரிகள் மீது 147, 323, மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4ன்கீழும், 3ம் எதிரி மீது 147, 323, 294(b), மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4ன்கீழும், 5 முதல் 7ம்எதிரிகள் மீது 147, 323 இதசன் பிரிவுகள் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**2 முதல் 6 எதிரிகள் ஆஜர். 7ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**2 முதல் 7 எதிரிகள்தரப்பு குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த தேதி 03.12.2011, நேரம் மாலை 07.30 என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காயம்பட்டவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் அன்றையதினம் இரவு 10.10 மணி. அசாஆ 2 காயம்பட்டவரை எத்தனை நபர் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 5 நபர்கள். முதல் விசாணை செய்த திரு.ராஜேந்திரன் அவர்கள் சாட்சிகளை விசாரித்து பின்னர் நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சிகளிடம் அசாஆ 2, 5 நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் புகார் மனுவில் 7 நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது குறித்து விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. புகார்மனுவிலும், எனது விசாரணையிலும் புகார்தாரர் எந்த, எந்த எதிரிகள், எவ்வாறு தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை, 7 நபர்கள் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 3 மற்றும் 5ம் எதிரி தனபாக்கியத்தை உருட்டு கட்டையால் அடித்தும், சுமதி பம்பையை பிடித்து கீழே இழுத்துபோட்டு அடித்தார்கள், 1, 2, 4, 5, 6, 7 எதிரிகள் சேர்ந்து கையாலும், கல்லாலும் அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. சாட்சி ஜெயராஜ்

என்ற மலர் எனது விசாரணையில் 7வது எதிரி சுமதி என்றும், 5ம் எதிரியும் சுமதி என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், குற்ற இறுதி அறிக்கையில் 7ம் எதிரி சுதா என்று அடித்து திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அழுத்தமாக எழுதப்பட்டுள்ளது.

2) காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 04.04.2012ம் தேதி பகல் 12.00 மணிக்கு விசாரித்தேன். இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கையை எத்தனை மணிக்கு தயார் செய்தேன் என்றால் அன்றையதினம் மாலை தயார் செய்தேன். நான் எந்த விசாரணையும் செய்யவில்லை, இதற்கு முன்னர் விசாரணை செய்த சார்பு ஆய்வாளரின் ஆவணங்களின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன், இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கின் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, புகார்தாரருக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதனால் அவர் கொடுத்த புகாரை பெற்று, எந்த ஒரு விசாரணையும் செய்யமால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.